1981 பிப்ரவரி 27]

முத்துப்பேட்டை நகரத்திற்கான குடிநீர் திட்டம்

*வினா எண் 290—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை நகரத்திற்குப் பரக்கலக்கோட்டையிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை நகரத்திற்கு பரக்கலக் கோட்டையிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் 31—3—1981 க்குள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) 32.37 இலட்சம்.

திரு. பொ. உத்திராபதி : முத்துப்பேட்டை நகரத்திற்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் 1977 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு பல இலட்ச ரூபாய் செலவு செய்து இறுதியில் தண்ணீர் கிடைக்கவில்லை என்று அறிவித்ததற்கும் பிறகு பரக்கலக்கோட்டையிலிருந்து தண்ணீர் எடுத்து கொண்டு வரும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இப்போது அதிக நாட்கள் கடந்து செல்லுவதால் மீண்டும் தண்ணீர் கிடைக்காது என்ற சூழ்நிலையை அறிவிப்பார்களா? என்ற அச்சம் இருக்கிறது. அந்த அச்சத்தைப் போக்கும் வகையில் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிப்படி விரைவில் தண்ணீர் கொடுக்க துரித நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த முறை ''அச்சம் தவிர்'' 31—3—1981 க்குள் தண்ணீர் கொண்டுவர முயற்சி எடுக்கிறோம்.

பெரியகுளம் கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்

*வினா எண் 291—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரிய குளத்திலுள்ள கிராமிய கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலம் கொடைக்கானல் தாலுக்காவில் இதுவரை எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளன?